பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 122

வெள்ளிக்கிழமை
28 மார்ச் 2025

பங்குனி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**பொலிஸ் பிரிவுக்குள் குற்றக் கும்பல்கள்!**

05

## வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 2 திணைக்களங்கள் முட்டுக்கட்டை

கொழும்பு, மார்ச் 28
வெளிநாடுகளைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்கள் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்வருகின்றபோதிலும், இரண்டு திணைக்களங்கள் முட்டுக்கட்டை போட்டுவருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 11

## இஸ்ரேல் படுகொலைகளுக்கு பிரிட்டனின் தீர்மானமென்ன?

முன்னாள் அமைச்சர் ராஜித கேள்வி



கொழும்பு, மார்ச் 28
ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிராகத் தடைகளை விதிக்கும் பிரிட்டன், காஸாவில் படுகொலையில் ஈடுபடும் இஸ்ரேல் படையினர் தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன? 11

சென்னையிலிருந்து

## காங்கேசனுக்கு பாய்மரக் கப்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
சென்னையில் இருந்து காங்கேசன்துறைக்கு எதிர்வரும் 3ஆம் திகதி 7 பேரைக் கொண்ட பாய்மரக் கப்பலொன்று சுற்றுலா வரவுள்ளது.
சென்னையில் இருந்து இந்தப் பாய்மரக் 11

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான செலவு வரையறை வெளியீடு!

கொழும்பு, மார்ச் 28
உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு வேட்பாளர் எவ்வளவு பணத்தைச் செலவிடலாம் என்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் வரையறைகள் விதிக்கப் 11

## அஞ்சல் வாக்களிப்பு ஏப்ரல் 22 ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28
உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் 11

## புகையிலைத் தோட்டத்தில் கஞ்சா வளர்த்தவர் கைது!

நான்கு அடி உயரமான செடியும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில், புகையிலைத் தோட்டத்துக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா வளர்த்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமையவே அவர் கைதுசெய்யப்பட்டுள் 11

## சாமர சம்பத் மறியலில்!



கொழும்பு, மார்ச் 28
நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸாநாயக்க, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இலஞ்சம் மற்றும் ஊழல் முறைகேடு 11

## பூநகரி பிரதேசசபை 9 தரப்புகள் போட்டி

கிளிநொச்சி, மார்ச் 28
கிளிநொச்சி பூநகரிப் பிரதேசசபைக்கான தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்த ஒன்பது தரப்புகளினதும் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஏழு அரசியற்கட்சிகள்மற்றும் இரண்டு சுயேச்சைகளுக்காக வேட்புமனுக்களே இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
(அ-ம125-113)

## காணாமலாக்கப்பட்டோரில் 19 பேர் உயிருடன் உள்ளனர்

விசாரணைகளில் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் இதுவரையில் 19 பேர் உயிருடன் இருக்கின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளதாக காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் 11

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணம் அச்சுவேலி வீதியில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சையின் 11

## மன்னார் பிரதேசசபைக்கு 10 வேட்புமனுக்கள் ஏற்பு

மன்னார், மார்ச் 28
மன்னார் மாவட்டத்தில் இரண்டு கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், 10 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
மன்னார் பிரதேசசபைத் தேர்தலுக்கு 12 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தன. 11



முச்சந்தி முராரி

'சாமி வரம் குத்த பிறகும் பூசாரி குறுக்க நிக்கிறது சரியில்லை கண்டியளோ'

வேட்புமனுவில்

## போலிக் கையொப்பம்; பொலிஸ் விசாரணை!

யாழ்ப்பாணம், மார்ச் 28
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுவில், ஒருவருடைய கையொப்பத்தைப் போலியாக வைத்த குற்றச்சாட்டில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.
மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த நபரின் கையொப்பமே இவ்வாறு போலியாக வைக்கப்பட்டுள்ளது.
அந்த நபர் தேர்தல் ஆணைக் 11

## தடையின் பின்னணியில் விடுதலைப்புலிகளா?

ஆராய்கின்றதாம் அரசு



கொழும்பு, மார்ச் 28
பிரிட்டனின் தடை விவகாரத்தின்பின்னணியில் புலம்பெயர் புலிகள் உள்ளனரா? என்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னாள் தளபதிகளுக்கு எதிராக பிரிட்டன் பிறப்பித்துள்ள 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4030 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 03 13 53 74 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1097 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 30 43 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0056 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 1 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2136 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 01 14 43 97 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5788 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 1 8 7 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1818 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 06 10 66 76 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 27.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0363 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 7 1 |

# தையிட்டி விகாரை விவகாரம்; நேர்மையாக அரசு செயற்படும்

## புத்தசாசன அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

**தையிட்டியில் உள்ள விகாரை தொடர்பான பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் மிகவும் நேர்மையாகச் செயற்படுகின்றது. ஆனால் சிலர் மதநல்லிணக்கத்துக்குத் தீங்கு விளைவிக்க முயற்சிக்கின்றனர்.**

இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஓர் அரசாங்கமாக திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்சினையில் தேவையான நேர்மையான தலையீட்டை நாங்கள் எடுத்துள்ளோம். யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் அமைச்சர் இ.சந்திரசேகரனும் எங்களைச் சந்தித்தார்.

சிலர் இந்த விடயத்தை ஒரு பிரச்சினையாக மாற்றி மதநல்லிணக்கத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றனர் என்று தெரிகின்றது.

அதன்மூலம் அரசாங்கத்தைப் பற்றிய தவறான கருத்தை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது. 30 ஆண்டுகாலப் போருக்குப் பின்னர் எழும் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு மிகவும் உணர்திறன் வாய்ந்த பதிலை வழங்குவது ஓர் அரசாங்கமாக நமது பொறுப்பாகும். இந்தப் பிரச்சினையை நாங்கள் எவ்வாறு தீர்ப்போம் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க முழு நாட்டையும் அழைக்கிறோம்- என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.03.2025 | வியாழக்கிழமை | 0494 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| M | 3 6 8 4 5 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2762 | M | 13 18 25 68 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2025 | வியாழ்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 24 32 40 47 | 4923 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.03.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0651 | 04 13 48 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2025 | வியாழ்க்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 18 25 46 60 | 4474 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.03.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 03 | 13 16 42 55 | 1938 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2025 | வியாழ்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 08 52 62 63 | 2588 |

## தமிழ்மொழிப் பரீட்சை எழுதிய 88 வயது சிங்களப் பாட்டி

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் 88 வயது சிங்கள பாட்டி ஒருவர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம்மொழி தமிழ்ப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

இந்தப் பாட்டி 40 வருடங்கள் ஆசிரிய சேவையை முடித்து 1996 இல் ஓய்வுபெற்றவர் எனக் கூறப்படுகின்றது.

குறித்த பாட்டி க.பொ.த சாதாரணதர பரீட்சையில் தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன் அவருக்குப் பலரும் பாராட்டும் தெரிவித்துவருகின்றனர். (ச-இ)

## எலான் மஸ்க்குக்காக இலங்கை வான்பரப்பு தற்காலிகமாக மூடல்

கொழும்பு, மார்ச் 28

எலான் மஸ்கின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தின் 'ப்ரேம்2' என்ற நடவடிக்கைக்காக ஏப்ரல் முதலாம் திகதி இலங்கை வான்பரப்பு முதன்முறையாக தற்காலிகமாக சில மணிநேரம் மூடப்படவுள்ளது.

இதனால் மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான விமானப் பயணங்களில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்றும் சிங்கப்பூர், பாங்கொக், பீஜிங், அவுஸ்திரேலியா போன்ற இலங்கையின் கிழக்குத் திசையூடான விமானப் பயணங்களின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, சி)

# பிரிட்டன் இழைத்த அநீதிக்கு நீதி வழங்கப்படவில்லையாம்

## வசந்த கரன்னகொட கவலை

கொழும்பு, மார்ச் 28

இலங்கையிலும், இந்தியாவிலும் பிரிட்டன் காலனித்துவ ஆட்சியாளர்கள் இழைத்த அநீதிகளுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. ஆனால் பிரிட்டன் இலங்கைக்கு எதிராக மனித உரிமைத் தடைகளை விதிக்கின்றது.

இவ்வாறு அண்மையில் பிரிட்டனால் தடைவிதிக்கப்பட்டுள்ள நால்வரில் ஒருவரான முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிரிட்டன் தனது கடந்தகாலச் செயற்பாடுகளுக்காக மன்னிப்புக் கோரவில்லை. காஸா, சிரியா, ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற இடங்களில் நடக்கும் விடயங்களில் பிரிட்டன் ஏன் மௌனமாக இருக்கின்றது?

அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் தீவிரமாகச் செயற்படுகின்றனர். 'தனி ஈழம்' என்ற தங்களின் இலக்கை நோக்கிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தடை ஆரம்பமாக இருக்கலாம். வெளி அழுத்தங்களால் மேலும் தடைகள் விதிக்கப்படலாம். முன்னாள் மனித உரிமை சட்டத்தரணியான பிரிட்டன் பிரதமர் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்காக இந்த விடயத்தைப் பயன்படுத்துகின்றார்.

இலங்கை அரசாங்கம் தடைகளுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். பயங்கரவாதத்தை ஒழிக்க உதவிய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு [illegible] இருக்கவேண்டும்- என்றார். (எ-இ)

## குரங்குகளைக் கட்டுப்படுத்த 100 இலட்சம் ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, மார்ச் 28



விவசாயப் பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய மாகாண சபை 100 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

விவசாய நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் நடைபெற்ற கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் குரங்குகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளின்படி, ரந்தெனிகல நீர்த்தேக்கத்தை அண்மித்த தீவுப்பகுதியில் குரங்குகள் கொண்டுசெல்லப்பட்டு விடப்படவுள்ளன.

குரங்குகளைப் பிரித்தெடுத்தல், அவற்றைக் கூடுகளில் அடைத்து எடுத்துச்செல்லல், அவை விடப்படும் இடங்களில் மின்சாரவேலி அமைத்தல் போன்றவற்றுக்காகவே 100 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சுற்றுலாத் தலங்களாக வடக்கின் அம்மன் ஆலயங்கள்

சுற்றுலாப்பணியகம் விசேட திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

**வடக்கு மாகாணத்திலுள்ள அம்மன் ஆலயங்களை ஆன்மீக சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்த வடமாகாண சுற்றுலாப் பணியகம் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.**

கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி வடக்கிலுள்ள சிவாலயங்களுக்கான அடையாளப்படுத்தல் மற்றும் சிவாலயங்களுக்கான வரலாற்றுப் பின்புலம், போக்குவரத்து உட்பட சுற்றுலாசார் அனைத்து விடயங்களையும் உருவாக்கி விசேட சுற்றுலாத் திட்டமிடல் உருவாக்கப்பட்டது. இந்நிலையில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மென்மேலும் விருத்தி செய்தல், வடக்கின் ஆன்மீக சுற்றுலா விருத்தி மேம்பாடு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற- மரபுரிமைகளைக் கொண்ட அம்மன் ஆலயங்களை உள்ளடக்கி விசேட சுற்றுலாத்திட்டமொன்று உருவாக்கப் படவுள்ளது. இதன்பிரகாரம் வடமாகாண சுற்றுலாப்பணியகம் மற்றும் இந்துகலாசார அமைச்சின் கலந்துரையாடலுடன் 30 அம்மன் ஆலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக ஆலயங்கள் தொடர்பிலும் தகவல் சேகரிக்கப்படுகின்றது. தென்னிலங்கையைப் போல வடக்கிலும் இராமாயணம்சார் சுற்றுலா வழித்தடங்கள்சார் சுற்றுலாத் திட்டமிடல் நடவடிக்கைகள் வடக்கிலும் முன்னெடுக்கவுள்ளன. என்றும் வடமாகாண சுற்றுலா பணியகம் தெரிவித்துள்ளது. (ச-125)

தொடரும் எல்லைதாண்டல்

## 11 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நெடுந்தீவுக் கடற்பரப்பில்வைத்து அவர்கள் பயணித்த படகுடன் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வந்திருந்த படகிலிருந்தே 11 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கு அழைத்துவரப்பட்டநிலையில் அவர்களை மேலதிக சட்டநடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-100)

## ஒலுவில் துறைமுகம் விரைவில் புத்துயிர்!

அம்பாறை, மார்ச் 28

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர் தெரிவித்துள்ளார். ஒலுவில் துறைமுகத்துக்கு அமைச்சர் நேற்றுமுன்தினம் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டு துறைமுகத்தைப் பார்வையிட்டதுடன் பல தரப்பினருடனும் சந்திப்புகளில் ஈடுபட்டார்.

இதன்போது குறித்த துறைமுகத்தை மீளஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் அவதானம் செலுத்தியதுடன் இதற்குரிய நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். (ச-26)

## யாழில் அதிவெப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் தற்போது வெப்பமான வானிலை அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று மாவட்ட அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

உடல் வெப்பத்தைத் தணிக்கக்கூடிய நீராகாரங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும். குறிப்பாக குழந்தைகள், பெரியவர்கள் வெயிலில் அதிகநேரம் இருப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-41-20)

## வேட்புமனு நிராகரிப்பு சிறிரெலோ வழக்கு!

2025க்கான உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைக்கு ஜனநாயகத் தேசியக் கூட்டணிக் கட்சிசார்பில் கையளிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் தேர்தல் முகவரும், சிறிரெலோக் கூட்டணிக் கட்சியின் செயலாளருமான ப. உதயராசா தலைமையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-110)

பொலிகண்டியில்

## பழைய வீடொன்றிலிருந்து 70 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டிப் பகுதியில் நேற்றுக் காலை ஒருதொகை கேரளக்கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால், குறித்த பகுதியிலுள்ள பழைய வீடொன்றுக்குள் கஞ்சா



மறைத்து வைக்கப்படிருந்தநிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது சுமார் 70 கிலோவுக்கும் அதிகமான கேரளக்கஞ்சா மீட்கப்பட்டதுடன் அதன் மதிப்பு சுமார் ரூ. 13.5 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-27,26,100,66,20,28)




**பி**ழைவிடுறது மனிசன்ர இயல்புதான். ஆனால் அதைத் திருத்தாமல் திரும்பத் திரும்ப பிழை விடுறது தான் பெரும் பிழை. ரண்டு வருசத்துக்கு முந்தி யாழ்ப்பாணத் தில உள்ள பிரதேசசபையில வேலை செய்த ஒருத்தர் பெஞ்சன் எடுத்தவர். இப்ப பெஞ்சன் எடுக்கிறவைக்கு பாராட்டுப் பத்திரத்தை டியூரோ ப்ரேம் போட்டுத்தான் குடுக்கிறவை. அப்பிடி அவருக்கும் குடுத்திருக்கினம். அந்தப் ப்ரேமுக்கு அவரிட்ட நலன்புரிச் சங்கக்காசு எண்டு ரண்டாயிரத்து ஐநூறு ரூபாவும் வாங்கியிருக்கினம். அப்பிடி காசை வாங்கிக்கொண்டு ' சேவைநலன் பாராட்டுற' அந்த டியூரோ பிரேமில அவரின்ர அப்பான்ர 'சின்னத்துரை' எண்ட பேருக்குப் பதிலா வேற ஒரு பேரைப் போட்டிட்டினம். அதைப் பார்த்திட்டு இவரும் 'இப்பிடி அப்பான்ர பேருக்குப் பதிலா வேற ஒராளின்ர பேரைப் போட்டிருக்கிறியள். என்னெண்டு இதைநான் வீட்டை கொண்டுபோய் வைக்கிறது?'எண்டு கேட்டி ருக்கிறார். அதுக்கு அவரின்ர ஒப்பீஸ்காரரும் 'ஐயையோ, நாங்கள் கவனிக்காமல் விட்டிட்டம். சரி உந்த ப்ரேமை தாங்கோ. நாங்கள் திருத்தித் தாறம் 'எண்டு அதை வாங்கியிருக்கினம்.

நாலைஞ்சு மாதம் போக, அவை திருத்தின அந்த சேவைநலன் பாராட்டுப் பத்திரத்தைக் கொண்டந்து குடுத்திருக்கினம். இவரும் அதை வாங்கிப் பார்த்தால்'சின்னத்துரை' எண்டதை 'சின்னையா' எண்டு அடிச்சிருக்கினம். பெஞ்சன் எடுத்தவருக்கு பத்திக் கொண்டுவந்திட்டுது. ' என்ன பிறகும் பேரைப் பிழை யாத்தானே அடிச்சிருக்கிறியள். எனக்கு ப்ரேமும் வேண்டாம், உங்கட பாராட்டும் வேண்டாம்' எண்டு கொஞ்சம் கடுப்பாச் சொல்லிப்போட்டார். பிறகும் அவை 'இது எங்கட மிஸ்டேக்தான். உதைத் தாங்கோ நாங்கள் இனிச் சரியாத் திருத்க்கொண்டந்து தாறம் ' எண்டு வாங்கிக்கொண்டு போயிருக்கினம். இவரும் வேண்டாவெறுப்பா அதை வீட்டில வைச்சிருக்கேலாது எண்டிட்டு அவையிட்ட குடுத்துவிட்டிட்டார். அந்த சேவைநலன் பாராட்டு ப்ரேமை திருத்க்கொண்டு வாறமெண்டு போனவையை ரண்டு வருசமா அங்காலிப் பக்கம் காணவேயில்லையாம்.


ரண்டு வருசத்துக்குப் பிறகு, கிட்டடியில அவர் தன்ர பழைய ஒப்பீஸுக்கு போயிருக்கிறார். அவரை க் கண்டிட்டு 'அண்ணை சொறி. இந்த ப்ரேமை தாறதுக்கு லேட்டாப் போட்டுது. குறைநினைக்காதை யுங்கோ' எண்டு அங்க இருந்தவை திருத்தின 'ப்ரேமை' அவரிட்ட குடுத்திருக்கினம். இவரும் அதை வாங்கிப் பார்த்திருக்கிறார். இந்தமுறை அப்பான்ர பேரும் சரி, இவரின்ர பேரும் சரி. ஆனால் இந்தப் பெஞ்சன் எடுத்த ஆள் கடுமையாக் கத்ததொடங்கிட்டார். 'ஒருக்காச் சொன்னால் விளங்காதோ. மூண் டாம் தரமும் பிழையாத் தாறதுக்குத் தராமலே இருந்திருக்கலாம்' எண்டு அதைச் சுழட்டி எறிஞ்சிருக்கிறார். அதைக் குடுத்தவைக்கு என்ன பிழை எண்டு விளங் கேலை. மெதுவா அவரிட்ட கேக்கத்தான் 'அதில என்ர பேருக்கு முன்னால திருமதி எண்டு போட்டிருக் கிறி யள். நானென்ன பொம்பிளையோ?' எண்டு அவர் திருப்பிக் கேட்டிருக்கிறார். 'சொறியண்ணை, குறை நினைக்காதையுங்கோ, உதையொருக்கா தாங்கோ, நாளைக்கே திருத்திக்கொண்டந்துதாறம்' எண்டு அவையள் சொல்லியிருக்கினம். அவ்வளவுதான். அந்தாளுக்கு கோபம் தொங்கலுக்குப் போட்டுது . 'இனிமேல் வீட்டுப் பக்கம் உந்தப் ப்ரேமோட வந்தியளெண்டால் நாயைத் தான் அவிட்டுவிடுவன்' எண்டு சொல்லிக்கொண்டே விடுவிடெண்டு வீட்ட வெளிக்கிட்டுட்டார் தங்களோட வேலை செய்தவரின்ர முழுப்பேரையே மூண்டு தரமா ஒழுங்காத் திருத்தத் தெரியாதவைதான், சனத்துக்கு சேவை செய்து கிழிக் கப் போயினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**கனகரத்தினம்**
**சுரேஸ்குமார் (சுரேஸ்)**
(பணியாளர், புதுக்குடியிருப்பு ஆதாரவைத்தியசாலை)
பிறப்பு 16.08.1976 — இறப்பு 28.03.2009

அன்பின் திருவுருவே
கண்முன்னே வாழந்த காலம்
கனவாகிப் போனாலும் நெஞ்சில் பதிந்த
நினைவலைகள் என்நாளும் உயிர்
வாழும்

**கந்தையா**
**ஜெயக்குமார் (ஜெயம்)**
பிறப்பு 17.05.1984 — இறப்பு 13.03.2009

உன் புன்சிரிப்பும் புத்தெழிலும்
இப் பூமியில் கனவாகிப் போனாலும்
உன் வீரியம் விண்ணதை தொட்டதுவே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி சு. பரிமளம் (மதி) — அப்பா, அம்மா, சகோதரங்கள்
தாவளை – இயற்றாளை, வரணி.

(cr.44668) (N-1)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 09 • 11 • 1945



இறப்பு 27 • 02 • 2025

**அமரர். திரு. கந்தையா இராஜேந்திரம்**

கடந்த 27. 02. 2025 அன்று இறைபதமடைந்த திரு கந்தையா இராஜேந்திரம் அவர்களின் 31ம் நாள் கிரியைகளும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் 29.03.2025 சனிக்கிழமை காலை 12.00 மணியளவில் லோரன்ஸ் ரோட், பம்பலப்பிட்டியவில் அமைந்துள்ள Saraswathy Hallஇல் நடைபெற உள்ளதால் அந்நிகழ்விலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரது இழப்பின் துயரில் பங்குபற்றியவர்கள், இறுதிக்கிரியைகளின் போது உதவியவர்கள் ஆறுதல் வார்த்தைகள் கூறியோர் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்


சரஸ்வதி ஹால்
பம்பலப்பிட்டி
கொழும்பு – 04.

## அழுத்தத்தில் பிள்ளைகள்!

தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை அதிகரிப்பால் பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்கு இடையிலான தொடர்பு குறைவடைந்துள்ளது. இளம் பிள்ளைகள் இதனால் மனம் மற்றும் உடல் ரீதியாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர் என்று குடும்ப நல சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் சிரந்திகா விதான தெரிவித்துள்ளார். சமூகத்தில் உள்ள 18 சதவீதமானோர் கடுமையான மன உளைச்சலால் அவதிப்படுவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 30 • 10 • 1951



மறைவு 07 • 04 • 2024

## அமரர் நடேசர் சிவயோகசுந்தரம்

**திதி: சதுர்த்தசி – 28.03.2025**

பணம் தான் பெரிதென்று வாழ்கின்ற
இந்த உலகத்தில் தம்பி ! நீ எப்படி வாழ்ந்தாய்
என்று இந்த அக்கா அறிவா ஏழாம்திகதி காலை
வந்த செய்தியைக் கேட்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம்
உங்கள் தீடீர் மறைவு உங்கள் மனைவி, பிள்ளைகளையும்
அதிர்ச்சியில் ஆழ்த்தியது. எங்கள் குடும்பத்தில் மூன்றாவது
பிள்ளையாகப் பிறந்து எல்லோரிடமும் அன்புடனும்
பாசத்துடனும் பழகி எங்களுடன் வாழ்ந்தாய் - யாரையும்
வெறுக்க மாட்டாய். உமது மனைவி பிள்ளைகளுடன்
அன்பாகவும் பாசத்தோடும் எந்த எதிர்பார்ப்பும்
இல்லாமல் ஒரு அன்பான குடும்பத்தை உருவாக்கி
பேரக்குழந்தைகளுடன் நீண்ட காலம் சிறப்புடன்
வாழ்வாய் என எதிர்பார்த்திருந்த வேளையில்
காலன் வந்து உம்மை சடுதியாக கவர்ந்து சென்று
விட்டான். கடைசி வரைக்கும் "சின்னத்தம்பியாக"

உங்கள் ஆத்மா சாந்தியடைய நீர் வணங்கிய சுதுமலை
புவனேஸ்வரி அம்மனை வேண்டுகின்றோம்.
**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**


**பா.சிவகாம்பிகை**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**
**021 225 5336**

(cs 29940) (N - 1)

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினரும்,**
**சகோதரிகளும்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 • 07 • 1939



இறப்பு 23 • 03 • 2025

## கந்தையா சுந்தரலிங்கம்

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் கடந்த 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பொன்னுக்குட்டி தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பராசமணி, மகாதேவன், வாமதேவன் ஆகியோரின் சகோதரரும், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி (சுவிஸ்), ஞானச்செல்வி (சுவிஸ்), திருச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைகுந்தநாதன், ரவீந்திரன் (சுவிஸ்), யோகலதன் (சுவிஸ்), பகீரதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிராமி (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்), ஓவியா (சுவிஸ்), சிறிராம் (சுவிஸ்), சங்கவி (சுவிஸ்), சாம்பவி (சுவிஸ்), துர்க்காயினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர் வீதி,**
**கோண்டாவில்,**
**மேற்கு.**

(cr.44616) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 534 2149**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## கழுத்தை நெருக்கும் அழுத்தங்கள்

இலங்கை இராணுவத்தில் இருந்த மூவர் உட்பட நால்வருக்குப் பிரிட்டன் தடைவிதித்திருப்பதைப் பூதாகரமாக்கியிருக்கின்றனர் தெற்கு அரசியல்வாதிகள். அரசியல் வங்குரோத்தில் இருந்த தெற்கு அரசியல் தலைமைகள், இந்த விடயத்தைத் தூக்கிப்பிடித்து புனைவுக்கதைகளைக் கூறிப் பிரபல்யமாகும் கைங்கரியத்தை ஆரம்பித்திருப்பதையும் அவதானிக்கமுடிகின்றது. தற்போதைய அரசாங்கமும் கடந்தகால அரசாங்கங்களைப் போன்று அரசியற் காரணிகளை அடிப்படையாக வைத்து பிரிட்டனின் தீர்மானத்தை நிராகரித்து -கண்டித்திருக்கின்றது. மொத்தத்தில் இலங்கை முன்னோக்கிச் செல்வதற்குச் சாத்தியங்களே இல்லை என்பது புலனாகியிருக்கின்றது.

உள்நாட்டுப்போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதில் இருந்து இலங்கை மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளை சர்வதேசரீதியில் எதிர்கொண்டுவருகின்றது. இறுதிப்போரில் நடந்தன என்று கூறப்படும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையை இலங்கை உருவாக்க வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேச நாடுகளாலும், சர்வதேச அமைப்புக்களாலும் பல தடவைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும் அவற்றைச் செயற்படுத்தாது அரசியல் நோக்கங்களுக்காக இலங்கை அரசு திட்டமிட்டுத் தாமதங்களை ஏற்படுத்தியிருந்தது.

இறுதிப்போர் குற்றச்சாட்டுகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குவதற்கு அப்பால், குற்றச்சாட்டுக்கு இலக்காகியவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இலங்கை தொடர்ச்சியாகச் செயற்பட்டிருந்தது. இலங்கையின் தண்டனையில் இருந்து தப்பிக்கவைக்கும் இந்தப்போக்கே சர்வதேச மட்டத்தில் மேலும் மேலும் நெருக்கடியை இலங்கைக்கு ஏற்படுத்தியது. போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று சர்வதேச சமூகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் உயர்பதவிகள் வழங்கப்பட்டன. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களுக்குத் தூதரகப்பணிகள் உட்பட முக்கியமான பணிகள் பின்னர் வழங்கப்பட்டிருந்தன. சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணான இவை இலங்கை மீதான நம்பகத்தன்மையை சர்வதேச மட்டத்தில் குறைத்திருந்தன.

இலங்கையின் இந்தச் செயற்பாடே சர்வதேசநாடுகளால் தடைகள் விதிக்கப்படுவதற்குக் காரணமாகவிருக்கின்றது. இலங்கை இராணுவத்தினர் இறுதிப்போரில் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பது உண்மையானால், விசாரணைகள் ஊடாக அதை நிரூபித்து குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்கொள்ளமுடியும். ஆனால் திட்டமிட்டு அதைச் செய்யாது இழுத்தடிக்கும் இலங்கை, சர்வதேசத்தால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும்போது வெளிநாடுகளின் இலங்கைக்கு எதிரான சதி என்று அந்த விவகாரத்தை முடித்துக்கொள்கின்றது. இறுதிப்போரில் நடந்த குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பொறிமுறை விடயங்கள் அனைத்தும் இலங்கையில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. தற்போது கூட பிரிட்டன் விதித்துள்ள தடையின் தார்ப்பரியங்கள் ஆராயப்படாது, உடனடியாகவே அந்தத் தடைக்கெதிராக தெற்குக் கொதித்தெழும்பியிருப்பதும் அதனாலேயே.

இறுதிப்போரில் நடந்த குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறையைத் தவிர்த்து குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இலங்கையின் போக்கு சர்வதேச சமூகத்துடனான உறவை நிச்சயம் மோசமாக்கும். இலங்கையின் நம்பகத்தன்மையும் கேள்விக்குறியாகும். மனித உரிமைகள் மற்றும்நீதிக்கான உறுதியானநடவடிக்கைகளே இலங்கையை சர்வதேசமட்டத்தில் உயர்த்தும் என்பதுடன், பொருளாதார ஆதரவையும் ஈட்டித்தரும் என்பதை இலங்கை அரசியல் தலைமைகள் புரிந்துகொள்ளவேண்டும். இலங்கையின் கடந்தகாலப் போக்கே பிரிட்டனின் தற்போதைய தடைக்குக் காரணம் என்பதை உணர்ந்து இனியாவது சரியான வழியில் செல்ல இலங்கை முயற்சிக்க வேண்டும். ஆனால் தற்போதும் இந்த விவகாரத்தை வைத்து எவ்வாறு அரசியல் இலாபம் தேடலாம் என்பதிலேயே தெற்கில் அவதானம் செலுத்தப்படுகின்றது. இந்தநிலைமை மாறும்வரையில் இலங்கை இந்த நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டே இருக்கப்போகின்றது. அவை ஒருநாள் இலங்கையின் கழுத்தை இறுக்கத்தான் போகின்றன.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

நீ கவலைகளைச் சுமந்து கண்ணீர் சிந்துவதைவிட,
இலட்சியங்களைச் சுமந்து ரத்தம் சிந்து.
உலகம் உன்னைப் போற்றும்.

– லெனின் –



# பொலிஸ் பிரிவுக்குள் குற்றக்கும்பல் ஊடுருவல்




பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 28**
**நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல்கள், பொலிஸ் பிரிவுகளுக்குள் ஊடுருவியுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சில பொலிஸ் அதிகாரிகள் அந்தக் கும்பல்களுக்கு இரையாகிவிட்டனர்.
சட்டத்தை நடைமுறைப்படுத்துவன் மூலம் மட்டுமே நாம் அமைதியை நிலைநாட்டமுடியும்.
இன்று நாம் அமைதியை நிலைநாட்ட முடியாததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மற்றொன்று போதைப்பொருள்.
இந்த இரண்டையும் அடக்குவதில் நாம் எதிர்கொள்ளும் பல சிக்கல்கள் உள்ளன. இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்கள் நம் மத்தியிலும் ஊடுருவியுள்ளன.
எங்கள் அதிகாரிகளும் அவர்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ச-இ)

## டெங்கை கண்டறிய ட்ரோன்



கொழும்பு, மார்ச் 28
டெங்கு நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களை ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அடையாளங்காணும் நடவடிக்கை நுகேகொடையில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் தேசிய டெங்குக் கட்டுப் பாட்டு பிரிவும் மேல் மாகாண சபையும் இணைந்து மூன்று நாள்களுக்கு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றன. (ச-இ)



## விலங்குகள் கணக்கெடுப்பு இன்று வெளியீடு

கொழும்பு, மார்ச் 28
பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் குரங்குகள், மயில்கள் மற்றும் அணில்கள் குறித்து சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.
விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வன உயிரினங்கள் பற்றிய தேசிய கணக்கெடுப்புக்கு அமைவாக, அவற்றை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஏப்ரல் முதல் "ஸ்டார் லிங்க்"

கொழும்பு, மார்ச் 28
"ஸ்டார் லிங்க்" இணையசேவை எதிர்வரும் முதலாம் திகதிமுதல் இலங்கையில் செயற்படத் தொடங்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சேவைகள் ஆணையாளர் நாயகத்தை மேற்கோள்காட்டி அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (எ-6)

## நாமல் மீதான வழக்கு விலகும் நீதிபதிகள்!

கொழும்பு, மார்ச் 28
கொழும்புக் கோட்டையில் உள்ள கிரிஷ் கட்டடம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையிலிருந்து இரு நீதிபதிகள் விலகுவதாக அறிவித்துள்ளனர்.
கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுல திலகரத்ன திறந்த நீதிமன்றத்துக்கு நேற்றுக் காலை தனது இந்த முடிவை அறிவித்திருந்தார்.
இந்த நிலையில் குறித்த வழக்கு மீதான விசாரணைகளில் ஈடுபட்டிருந்த இரண்டாவது நீதிவானான சுஜீவ நிஷங்கவும் குறித்த வழக்கு விசாரணைகளில் இருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை
சனிக்கிழமை-பங்குனி- 15
29.03.2025
சுபநேரம் : 03.13- 04.43
ராகுகாலம் : 09.13 - 10.43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

# 2025 – 2027

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருடகாலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார்.





## தனுசு

## 'நிதானம்... கவனம்... சாதகம்'

**எல்லோரிடமும் கண்டிப்புடன் இருக்கும் தனுசு ராசி அன்பர்களே,**

நீங்கள் எதிலும் சுறுசுறுப்பாக இருப்பவர். துணிச்சலுக்கும் தைரியத்துக்கும் பெயர்போனவர். வாக்குத் தவறாதவர். உழைப்பின்மூலம் மட்டுமே புகழடைய விரும்புபவர்கள். குறிக்கோளுடன் வாழ்ந்து வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக வாழ்பவர்கள். இதுவரை உங்களது தைரிய வீரிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி சுக ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் ராசியையும் பார்க்கிறார். உடற்சோர்வு அதிகரிக்கலாம். வருமானம் சீராகவே இருக்கும். பேராசைக்கு இடம்கொடுக்காமல் பணியாற்றவும். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விடயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்திசாதுர்யம் ஏற்படும்.

உங்களின் தனித் தன்மையை இழக்கமாட்டீர்கள். காரியங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள். உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்துமுடிக்க வழிபிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக்கேட்டு நடப்பார்கள். பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம்கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் சரியாகச் செய்வது அவசியம்.

**வியாபாரிகளுக்கு:** தொழிலில் இருந்த போட்டிகள் குறையும், இலாபம் அதிகரிக்கும், நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் அரவணைத்துச்சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். அதேநேரம் வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் உங்கள் கைக்கு வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் என்பதால் புதிதாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம்.

**கலைத்துறையினர்:** எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும். ரசிகர்களோடு கருத்துவேறுபாடுகள் ஏற்படநிறையவே வாய்ப்புண்டு. ஆனால் அவற்றை வெளிக்காட்டிக்கொள்ளாமல் ரசிகர் மன்றங்களுக்குப் பணம் செலவுசெய்வீர்கள்.

**பெண்கள்:** கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கிமகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுபகாரியங்களில் கலந்துகொள்வீர்கள். உடல்நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும். மாணவமணிகள் நல்ல மதிப்பெண்களை வாங்க வழி வகையுண்டு. பெற்றோர்களின் ஆதரவுகிடைக்கும். தினமும் உடற்பயிற்சிகளைச் செய்தால் மேலும் உடல் வலிமை பெறலாம்.

**மூலம்** : எதிரியைத் தகுந்த நேரம் பார்த்து வெற்றிகொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகம் உண்டாகும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம்போல் நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**பூராடம்** : குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டுப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளுக்காகச் சில பணிகளை கவனிக்க வேண்டி இருக்கும். அவர்களை அன்புடன் நடத்துவது நல்லது. நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவரத்து திருப்தி தரும்.

**உத்திராடம்:** புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. வீண் அலைச்சலும் காரிய தாமதமும் ஏற்படலாம். கவனம் தேவை. பல தடைகளைத் தாண்டி செயற்பட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த இலாபம் வரும். செயற்றிறமை வெளிப்படும். சுதந்திரமாகச் செயற்படும் வாய்ப்புக் கிடைக்கும்.

# 1,115 கிலோ பீடி இலைகளுடன் முருங்கனில் இருவர் கைது


மன்னார், மார்ச் 28

சட்டவிரோதமாக மன்னாரில் இருந்து குருநாகல் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு மன்னார் முருங்கன் பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது அவர்கள் பயணித்த வாகனத்தில் 36 மூடைகளிலிருந்து ஆயிரத்து 115 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளுடன் சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-56,213)



# முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு புதிய பிரதிப்பொலிஸ்மா அதிபர்

முல்லைத்தீவு, மார்ச் 28

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜெ.ஏ.சந்திரசேன பதவியேற்றுள்ளார்.

இரணைமடுச் சந்தியிலுள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். ஏற்கனவே கடமையாற்றிவந்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில் அந்த இடத்துக்கு சந்திரசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் முன்பு களுத்துறைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ச-25,113)

# திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமான வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் -50, நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் மாணிக்கவாசக சுவாமிகள் குருவணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் " மாணிக்கவாசகரும் ஆனந்தமாலையும் " எனும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (ச-41)

# ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 28

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் பங்குனி மாத 327 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 04 . 1955

மறைவு 08 . 04 . 2024

## பவானி விஸ்வலிங்கம்

அன்பும் அரவணைப்பும் தந்து
எங்களை வாழ வைத்தீர்கள் அம்மா
மெழுகாய் உருகி எங்களை ஒளியாய் பிரகாசிக்க செய்தீர்கள்
எங்கள் இதயங்களில் என்றும் உங்கள் நினைவுகள் வாழும்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (29.03.2025) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

72/9, பனிக்கர் லேன்,
பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்


# 20 கிலோ கஞ்சா ஆனையிறவில் மீட்பு



கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனையிறவுப் பகுதியில் நேற்று 20 கிலோ 175 கிராம் நிறையுடைய கேரளாக் கஞ்சா கிளிநொச்சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கப்ரக வாகனத்தைப் பொலிஸார் சோதனையிட்டபோதே கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர் சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28.113)

# இலங்கை தற்போதும் தீவிர சிகிச்சைப்பிரிவில்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

இலங்கை இப்போதும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குள்ளேயே இருக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அதானி குழுமத்தின் திட்டத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும். அதானியின் புதுப்பிக்கத்தக்க சக்தித் திட்டத்தின் ஊடாகப் பெருமளவு நிதியை இலங்கை பெற்றுக்கொள்ளமுடியும். அதானி இலங்கையில்முதலீடுசெய்தால்தொடர்ந்துஏனைய நாட்டு முதலீட்டாளர்களும் இலங்கையில் முதலீடு செய்ய முன்வருவார்கள்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தபோது இந்தியா 4.3 பில்லியன் டொலர் வழங்கியிருக்காவிட்டால் இலங்கையின் கதி என்னவாகியிருக்கும்? இந்தியாவே எமது அயல் நாடு. அமெரிக்காவோ ரஷ்யாவோ, சீனாவோ அல்ல. இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டும்.

இந்தியா இலங்கையின் நட்புநாடு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா இலங்கைக்குக் கைகொடுக்கும். இலங்கை இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல என்றார். (எ-6)

# கோப்பாய் பிரதேசத்தில் முன்மாதிரி முன்பள்ளி

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் பிரதேசத்தில் 18 முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்மாதிரியான முன்பள்ளிக் கட்டமைப்பை கோப்பாய் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கோப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் இந்த விடயத்தைப் பிரஸ்தாபித்தார். கோப்பாய் பிரதேசத்தில் 96 முன்பள்ளிகள் காணப்படுகின்றன என்றும், இதுவரை18 முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வலயக் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளிகளை நிர்வகிப்பதும் எமக்குச் சவாலானதாக மாறியிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

பிரதேச செயலகம், வலயக் கல்விப் பணிமனை, பிரதேச சபை ஆகிய அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றிணைத்து கோப்பாய்பிரதேசத்தில் முன்மாதிரியான ஒரு கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான தீர்மானத்தை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் முன்வைத்தார். புலம்பெயர்ந்தவர்களின் நிதியைப் பெற்று ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை நிவர்த்திப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்தத் தீர்மானம் தொர்பாக விரிவாகக் கலந்துரையாடுவதற்கு விரைவில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ-125)


# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 06 . 1945

மறைவு 26 . 03 . 2025

## சிவஞானசுந்தரம் அனுஷியாதேவி

( ஹரிகணன் அச்சக உரிமையாளர் அமரர் திரு.ராஜ்குமார் அவர்களின் தாயார் )

கல்லூரி வீதி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் 17/9, பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானசுந்தரம் அனுஷியாதேவி அவர்கள் நேற்று முன்தினம் 26.03.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்துரை சிவரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் அவர்களின் அன்பு துணைவியாரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இரத்தினவல்லி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சித்திராங்கன், சுசீலாதேவி மற்றும் சிவதாசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் புவனசுந்தரி, காலஞ்சென்ற குணசுந்தரி, ஞானசுந்தரி, சற்குணசுந்தரி சண்பகசுந்தரம், காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம், கதிர்காமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகுமார், யசோதா, காலஞ்சென்ற ராஜ்குமார் அவர்களின் தாயாரும் வற்சலா, மங்களராணி, யாழினி ஆகியோரின் அன்பு மாமியும் தர்ஷன், தர்ஷிகா - Martin, தனுசன், கிஷோர்க், டிஷானி, மனஸ்விகா, அனுஷ்விகா, ஷாய்வ்ஷ்விகா ஆகியோரின் அன்புப்பேத்தியும் அபியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

17/9 ,பிள்ளையார் வீதி , தெற்கு,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.

தகவல், குடும்பத்தினர்


## தொண்டர் சபை அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

மேற்படி தொண்டர் சபை அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 02.04.2025 புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் தொண்டர் சபை காரியாலயத்தில் நடைபெறவுள்ளமையினால் அனைத்து தொண்டர் சபை அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தொண்டர் சபை நிர்வாகம்
[illegible] பிள்ளையார் கோவில்

(CR 44691) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கான சவால்கள் வட்டமேசை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பெண்கள் தற்காலச் சூழ்நிலையில் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விழுது நிறுவனம் மற்றும் ஜேர்மனிய அபிவிருத்தி கூட்டுதாபனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த வட்டமேடை கலந்துரையாடல் விழுது நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட அதிகாரி இந்துமதி ஹரிஹர தாமோதரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் அரசியலில் உட்பிரவேசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், நுண்நிதி கடன்களைப் பெண்கள் பெற்றுக்கொள்வதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள்,தற்போதைய இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனையால் சமூக மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் ஏற்படுகின்ற வன்முறை மற்றும் தற்கால சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அலசி ஆராயப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண உதவி தேர்தல் ஆணையாளர் சசீலன் இராஜேந்திரா , யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி ஆர். சுரேந்திரகுமாரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-20)


# Invitation for Bids (IFB)
# URBAN COUNCIL, VAVUNIYA

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Secretary, Urban Council, Vavuniya now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | NP/14/43(2)/06/WD/PSDG/16/2025 | Construction of Building for Pandarikulam Community Centre at Pandarikulam, Vavuniya. | 3.31 | C9 & Above (Building Construction) | 34,000.00 | 27.06.2025 | 84.0 |
| 2 | NP/14/43(2)/06/WD/PSDG/17/2025 | Construction of Water Filter Centre at Pandarikulam Community Centre at Pandarikulam, Vavuniya. (RO Plants) | 2.49 | C9 & Above (Building Construction) | 25,000.00 | 27.06.2025 | 84.0 |
| 3 | NP/14/43(2)/06/WD/CF/18/2025 | Improvements to Poonthoddam Periyarkulam road, Vavuniya. | 1.27 | C9 & Above (Highway Construction) | 13,000.00 | 27.06.2025 | 84.0 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. Interested eligible bidders may obtain further information from Secretary, Urban Council, Vavuniya (T.P:024-222 2275/ 024 222 8066 email: ucvavuniya@yahoo.com) from 09.00 Hrs to 14.30 Hrs and inspect the bidding documents at the address Secretary, Urban Council, Vavuniya.
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule / Bidding Data" of the Procurement Document.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Secretary, Urban Council, Vavuniya from 28.03.2025 until 10.04.2025 from 09.00 Hrs to 14.30 Hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00).The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Urban Council, Vavuniya on or before 11th April 2025 and 10.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 03.04.2025 at 10.30 Hrs at the Urban Council, Vavuniya.

The address (es) referred to above is (are):

Chairman
Divisional Procurement Committee,
Urban Council,
Vavuniya.
28.03.2025

(CR/4483) J-1


# வெங்காயம் விலை சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். குடாநாட்டில் வெங்காயத்தின் விலை சரிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெங்காயச் செய்கை அறுவடை தற்போது இடம்பெற்று வருவதனால் அதிகளவில் வெங்காயம் சந்தைக்கு எடுத்து வரப்படுகின்றன.

தற்போது ஒரு கிலோ சின்ன வெங்காயம் 180 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. அதேவேளை நிலவும் கடுமையான வெப்பத்தால் சின்ன வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-25, 17)


# மணப்பெண் தேவை

1. மட்டுவில், மீசாலை இந்து கௌரவகுலம் (V), 1985, கேட்டை, B. Eng , UK Citizen, மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 51409
2. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V). 1985, மகம், Qualified, Charted Accountant, UK Citizen, மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 37551
3. சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (V). 1984, ரேவதி MBBS Dentist, USA Citizen, மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 34626
4. வல்வெட்டி, இந்து கௌரவகுலம் (V). 1986, மகம், Bachelor Degree in Business Management , UK Citizen, மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 50435
5. அச்சுவேலி - புத்தூர், இந்து கௌரவகுலம் (K). 1986, Administrative Professional France Citizen மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 25869
6. தெல்லிப்பளை - இருபாலை, இந்து, கௌரவகுலம் 1987 பூரட்டாதி, BSc (Hons) in Quanitity Surveying, Quanity Surveyors, Dubai மணமகனுக்கு, மணமகள் தேவை.
7. சங்கானை, இந்து, கௌரவகுலம் (K), 1992 விசாகம், BA (Hons) Accounting, Germany + UK Citizen மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 34210
8. தெல்லிப்பளை, இந்து, கௌரவ்குலம் (V). 1988, உத்தரம் Phd, Civil Engineer, USA Citizen மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 34339
9. இணுவில் - உரும்பிராய், இந்து, கௌரவகுலம் (V) 1989, பூசம், Master, financial officer, Canada Citizen, மணமகனுக்கு, மணமகள் தேவை. பதிவெண் - 45173

தொடர்புகளுக்கு: J.P.Sarma Whatsapp and Viber
www.thaalee.com 077 539 3728
(CS/57846) J-1



# 12 ஆம் ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை



திதி : 28.03.2025

## Lion மார்க்கண்டு - கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதவான்
விமாகி உரிமையாளர்

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் பன்னிரண்டு புரண்டிடினும் ஆறிடுமோ எம்துயரம்
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறதே
எனினும் காலங்கள் கடுகதியாய் கடந்தோடிடினும்
நிழலாக நீங்கள் எம்முடன் இருந்து நிஜமாக எம்மை வழிநடத்துகிறீர்கள்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனலாகி போனாலும்
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ்கின்றீர்கள்.

இனிய நினைவுகள் இழந்த வலியும்,
இறுதி மூச்சுவரை எம்முள்ளே சுமப்போம்.

நீங்கா நினைவலைகளுடன்
அன்பு மனைவி - றோகினி கிரிதரன்
அருமை மகள் - கிரிதரன் அம்ரிஷா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## ஜப்பான் அரசின் நிதியில் மீன்குஞ்சு பொரிப்பகம்

அம்பாறை, மார்ச் 28

மேம்படுத்தப்பட்ட மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் மூன்று உயிர்விரலி மீன் குஞ்சு விநியோக பவுசர்கள் அம்பாறை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கடற்றொழில் அமைச்சரால் நேற்றுமுன்தினம் கையளிக்கப் பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாப னத்தின் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசின் 3 மில்லியன் அமெ ரிக்க டொலர் நிதிப்பங்களிப்பில் இவை வழங்கப்பட்டுள்ளன. மீன்குஞ்சு பொரிப்பகச் செயற்பாடுகளை வலுப்படுத்தல் மற் றும் உயிர்மீன்குஞ்சு விநியோகத்தை மேம்படுத்தல் மூலம் உள்நாட்டு மீன்பிடித் துறையை உறுதிப்படுத்துவதுடன் மீன வக் குடும்பங்களும் பயன்பெறுவர் என்று இதன்போது தெரி விக்கப்பட்டது. (ச-25, 26)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 28

இணுவில்பொதுநூலகம் சனசமூகநிலையத்தின் 23 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிமுதல் இணுவில் பொதுநூலகக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Pathway Near Ward 06 To A&E Building And Roof Work, Painting and Shed for Ambulance Pathway at A&E . | 1500.00 | 154,000.00 | 91 | 7.74 Mn | C7 |
| 2 | Renovation of Ward No 01, 03, 16B, 21, 20 and Rehabilitation Building and A&C, Eye Clinic | 1500.00 | 94,000.00 | 91 | 4.7 Mn | C8 |
| 3 | Renovation Work of Surgical Ward | 5000.00 | 991,000.00 | 91 | 49.55 Mn | C5 |
| 4 | Construction of Shed for Vehicle Park at BCAS Land & Bike Shed Near The Police Hut | 1500.00 | 230,000.00 | 91 | 8.5 Mn | C7 |
| 5 | Ceiling & Modification Work at New Clinic & Pharmacy, | 1500.00 | 60,000.00 | 91 | 3 Mn | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 01.04.2025 up to 16.04.2025 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 17.04.2025, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
28.03.2025.

(CR/44682) J-1

## கால்நடை மருத்துவ அதிகாரி பணிமனையின் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் கால்நடை மருத்துவ அதிகாரி பணிம னையில் காணப்படும் குறைபாடுகள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டநிலையில், குறைபாடுகளை நிவர்த்தி செய்வ தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரி வித்த பிரதேச கால்நடை சுகாதார மருத்துவ அதி காரி, ஒருவரே பணியாற்றும் நிலையில் களப் பயணங்களுக்காக 35 லீற்றர் எரிபொருளே வழங் கப்படுகின்றது. அது எமக்குப் போதுமானதாக இல்லை. இதனால் கால்நடைகளைப் பரிசோ தனை செய்யச் சில சந்தர்ப்பங்களில் இயலாது போகின்றது. கால்நடை மருந்துகளுக்கும் தட்டுப் பாடு நிலவுகின்றது. ஆளணிப் பற்றாக்குறையும் உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

அப்போது கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பிரதேச செயலக ஆண் உத்தியோ கத்தர்களைச் சுழற்சிமுறையில் கால்நடை மருத் துவ அதிகாரி பணிமனையில் இணைப்புச் செய்து பணியில் ஈடுபடுத்தவேண்டும் என்றும், இது தொர் பாக அமைச்சிடம் விடயங்கள் முன்வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (எ-28)

## இயக்கச்சியில் பனைகள் சட்டவிரோதமாக அழிப்பு!

### பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச் 28

இயக்கச்சிப் பிரதேசத்தில் இரவோடு இரவாக நூற்றுக்க ணக் கான பனை மரங்கள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கண்ணகி அம்மன் ஆலய சுற்றாடலில் சட்டவிரோதமாகக் காணி ஒன்றைக் கையகப்படுத்தி பனை மரங்கள் அழிக்கப் பட்டுள்ளன என்று பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது. நூற்றுக்கணக்கான பனைமரங்கள் சில நாள்களில் அழிக் கப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பிர தேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**இடபம்:** சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்குப் பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். பிள்ளைகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். வெளியிடங்களில் உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** அன்றாடப் பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**துலாம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்வது நல்லது.

பூரனின் அதிரடி ஆட்டத்தால்

# ஹைதராபாத்தின் மூர்க்கத்தை கட்டுப்படுத்தியது லக்னோ!



ஹைதராபாத், மார்ச் 28

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பூரனின் அதிரடி ஆட்டமும், தாகூரின் விக்கெட் வேட்டையும் கைகொடுக்க, பலம்வாய்ந்த ஹைதராபாத்தை வெற்றி பெற்றது லக்னோ.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஹைதராபாத்தின் ஆரம்ப வீரர்களாக ட்ராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா இருவரும் களமிறங்கினார்கள். 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அபிஷேக் சர்மா. கடந்த ஆட்டத்தில் சதம் கடந்த இஷான் கிஷான் இந்த ஆட்டத்தின் முதலாவது பந்திலேயே வீழ்த்தப்பட்டார். இருவரையும் தாகூரே வெளியேற்றினார். ஆனால், ஹெட் மறுமுனையில் அச்சுறுத்தினார். அவர் 28 பந்துகளில் 47 ஓட்டங்களைப் பெற்றார். மத்திய வரிசையில் நிதீஸ் குமார் ரெட்டி 32, கிளாசன் 26 மற்றும் வெர்மா 36 ஓட்டங்களைப் பெற முடிவில் 9 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது ஹைதராபாத். பந்துவீச்சில் தாகூர் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணிக்கு ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் மார்க்ரம். மிச்செல் மார்ஷ் மற்றும் நிக்கலஸ் பூரன் இருவரும் சரவெடியாய் வெடித்தனர். வாணவேடிக்கை காட்டும் ஹைதராபாத்தே வியக்கும் படியாக அவர்களின் ஆட்டம் இருந்தது. வெறும் 26 பந்துகளில் 76 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் பூரன். 52 ஓட்டங்களுடன் மிச்செல் மார்ஷ் ஆட்டமிழந்தார். ஆனால் எந்தப் பதற்றத்தையும் லக்னோ உணரவில்லை. முடிவில் 23 பந்துகள் மீதமிருக்க அந்த அணி 5 விக்கெட்டுகளால் வென்றது. (ம)




மாணவியை கண்டித்த விவகாரம்;

## ஆசிரியருக்கு ஆதரவாக திரண்டனர் பெற்றோர்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஐந்தாம் வகுப்பு மாணவியைக் கண்டித்த விவகாரம் தொடர்பில் ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில், அந்த ஆசிரியருக்கு ஆதரவாக பெருமளவான பெற்றோர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகத் திரண்டனர்.

மாணவி செய்த தவறுக்காக அவரைத் தண்டித்த ஆசிரியருக்கு எதிராகவே மாணவியின் பெற்றோரால் இவ்வாறு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் குறித்த மாணவியிடம் கொடூரமாக நடந்துகொள்ளவில்லை என்றும், இலேசாக அதட்டியதற்கே அவரை பொலிஸ் நிலையம் வரை கொண்டு வந்துள்ளதாகவும் ஏனைய மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.


அத்துடன், அந்த ஆசிரியரை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் பெற்றோர் பலர் திரண்டிருந்தனர். மாணவர்களின் நன்மைக்காகச் செயற்படும் ஆசிரியர்களை இவ்வாறு நடத்துவது சமூகத்துக்கு ஒப்பானது அல்ல என்றும் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகத் திரண்டிருந்த பெற்றோர் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (ம-100)

## தமிழகத்தில் வெப்பஅலை!

இந்தியாவில், தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் வெப்ப அலையின் தாக்கம் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் இரத்தினம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரத்தினம் நேற்று (27.03.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் – செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ரவீந்திரன், செல்வானந்தராஜா மற்றும் கௌரி (பிரான்ஸ்), லக்கி (பிரான்ஸ்), கௌசலா (பிரான்ஸ்), சுபாஜினி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரேமநாயகி (சுவிஸ்), ரவீந்திரா (சுவிஸ்), லோகநாதன் (பிரான்ஸ்), கருணா (பிரான்ஸ்), சிறீதரன் (பிரான்ஸ்), சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரியங்கா, (சுவிஸ்), லோகியா (பிரான்ஸ்), தங்கவி (பிரான்ஸ்), தஞ்சயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**55, சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 1778 152**

(CS 2827) A

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 18ஆவது சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச.நவநீதன் 'விடை பெறு படலம்' எனும் விடயப் பொருளில் ஆற்றவுள்ளார். (ச-41)

### வடக்கு...

ஜனாதிபதி அநுரகுமாரவின் கோரிக்கைக்கு அமைய, வெளிநாடுகளைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்கள் சில வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்வந்துள்ளன. கடனாக இல்லாமல் நன்கொடையின் அடிப்படையிலேயே இந்த அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவுள்ளன. ஆயினும், நிதியமைச்சின் கீழ் இயங்கும் இரண்டு திணைக்களங்கள் அந்த முயற்சிகளுக்குத் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டுவருவதாக நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

வடக்கில் மாத்திரம் ஏன் இந்தத் திட்டம்? ஏனைய இடங்களுக்கு ஏன் வழங்கவில்லை? என்று கேள்விகளைக் கேட்பதோடு, அவற்றின் நடவடிக்கைகளுக்கும் இடையூறு செய்யும் வேலைகளில் அந்தத் திணைக்களங்கள் முனைப்புக் காட்டுவதாகவும் கூறப்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில், ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய நாட்டுக்குள் வரும் அபிவிருத்தித் திட்டங்களைக்கூட அரச திணைக்களங்கள் தடுத்து நிறுத்துகின்றமை பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-இ)

### உள்ளூராட்சித்...

பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதிகளிலும் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு வாக்காளருக்காகச் செலவிடப்படக்கூடிய தொகை 74 ரூபா முதல் 160 ரூபா வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசசபையில் வாக்காளர் ஒருவருக்கு 74 ரூபா செலவிடலாம் என்பதே குறைந்தபட்ச நிர்ணயமாகக் காணப்படுகின்றது. தென்னிலங்கையைச் சேர்ந்த தொகுதியொன்றில் வாக்காளர் ஒருவருக்காக அதிகபட்சமாக 160 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### விபத்தில்...

போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தசாமி சந்திரராசா (வயது-72) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அச்சுவேலியில் இருந்து நல்லூர் நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, அவர் கொண்டுசென்ற ஊன்றுகோல் ஓட்டோ ஒன்றுடன் மோதுண்டதைத் தொடர்ந்து அவர் கீழே வீழ்ந்துள்ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அந்த நபர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### அஞ்சல்...

தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்பு ஏற்பாடுகள் முழுமையடைந்துள்ளன. ஏப்ரல் மாதம் 22ஆம், 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு ஏப்ரல் மாதம் 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் வாய்ப்புகள் வழங்கப்படும்-என்றார். (அ-ம-இ)

### மன்னார்...

இவற்றின் வேட்புமனுக்கள் நேற்று ஏற்கப்பட்ட நிலையில், இரண்டு கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒரு கட்சியின் வேட்புமனு தாமதம் காரணமாகவும், இன்னொரு கட்சியின் வேட்புமனு வேட்பாளர்கள் போதாமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டுள்ளன. 9 கட்சிகள், ஒரு சுயேச்சை என பத்துத் தரப்புகள் மன்னார் பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளன. (அ-ம-125)

### தடையின்...

தடைகளின் பின்னணியில், கனேடிய நீதியமைச்சர் ஹரி ஆனந்த சங்கரியும், புலம்பெயர் புலிகளும் உள்ளனரா? என்று அமைச்சரிடம் நேற்று ஊடகவியலாளர்கள் வினவியுள்ளனர். இதன்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனின் தடைகளுக்குப் பின்னால் உள்ள அனைத்துச் சாத்தியமான காரணங்கள் தொடர்பிலும் நாங்கள் ஆராய்ந்துவருகின்றோம். உலக ஒழுங்கு தொடர்பான புரிதல் எமக்கு உள்ளது. எனவே, எம்மால் பல விடயங்களை அனுமானிக்கவும், தீர்மானிக்கவும் முடியும்.

இலங்கையென்பது சுயாதீன நாடாகும். எனவே, பிரிட்டனால் எடுக்கப்பட்ட ஒருதலைபட்சமான தீர்மானம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு உரிய வகையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்திலும் அரசியல் நடத்துவதற்கு எதிரணிகள் முற்படுகின்றன. அந்த பொறிக்குள் நாம் சிக்கமாட்டோம் என்றார். (அ-ம-44)

### காணாமலாக்...

பணிப்பாளர் சட்டத்தரணி தற்பரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை 16 ஆயிரத்து 966 பேர் காணாமல் போயுள்ளனர் என காணாமற்போனோரைக் கண்டறியும் செயலகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் 3 ஆயிரத்து 742 பேர் படையினரும், பொலிஸாரும் காணாமற்போயுள்ளனர் எனவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதில் 6 ஆயிரத்து 449 பேரின் விசாரணைகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், 10 ஆயிரத்து 517 பேர் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

2000ஆம் ஆண்டுக்குப் பின்பு 7 ஆயிரத்து 406 பேரும், 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் 9 ஆயிரத்து 560 பேரும் காணாமற்போயுள்ளனர் என ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதிலே 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற்போன 7ஆயிரத்து 406 பேரில் 6 ஆயிரத்து 449 பேர் தொடர்பான விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளன. நிறைவுபெற்ற விசாரணைகளில் இருந்து 19 பேர் உயிரோடு இருப்பதனைக் கண்டறிந்துள்ளோம். அவர்களது விவரங்கள் விரைவில் வெளிவரும்.

அதேவேளை 2 ஆயிரத்து 604 பேர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். 407 பேர் மரணச்சான்றிதழுக்கான பரிந்துரைகளைப் பெற்றுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத்துக்கு 4 ஆயிரத்து 408 பேர் விண்ணப்பித்துள்ளனர் - என்றார். (அ-ச-26-125)

### புகையிலைத் ...

ளார். தோட்டத்துக்குள் இருந்து நான்கு அடி உயரத்துக்கு வளர்க்கப்பட்ட கஞ்சாச் செடியும் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-26)

### சாமர...

கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக்குழுவில் சாமர சம்பத் தஸநாயக்க விசாரணைக்காக நேற்று முன்னிலையாகியிருந்தார்.

விசாரணைகளைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட அவர், நேற்று மாலை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இரண்டு வழக்குகளுக்காக அவருக்குப் பிணை வழங்கப்பட்டபோதிலும், மூன்றாவது வழக்குக்காக அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-சி)

### காங்கேசனுக்கு...

கப்பல் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதி மாலை 3 மணியளவில் காங்கேசன்துறைக்கு வரும் இந்தக் கப்பலில் வரும் பயணிகள், யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் தங்கியிருக்கவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-125)

### இஸ்ரேல்...

என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

மூன்று முன்னாள் படை தளபதிகள் உட்பட நான்கு இலங்கையர்களுக்கான பிரிட்டனின் தடை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறார்கள், பெண்கள் உட்பட 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் காஸாவில் கொல்லப்பட்டுள்ளனர். அதேபோல மேற்குக் கரையிலுள்ள பலஸ்தீனர்களும் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். இப்படியான செயலில் ஈடுபடும் இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக பிரிட்டன் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது? இஸ்ரேலியப் படையினருக்கு பிரிட்டன் தொடர்ச்சியாக உதவிவருகின்றது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நிதியுதவி வழங்கிவருகின்றது. கொடூரச்செயல்களில் ஈடுபடும் இஸ்ரேலியப் படையினரைத் தண்டிக்காத பிரிட்டன், ஸ்ரீலங்காப் படையினரை குறிவைப்பதன் நோக்கம் என்ன?-என்றார். (அ.ம44)

### போலிக்...

குழுவுக்கு இதுதொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்தே, தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26)


**சாரதி தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஓய்வு பெற்ற சாரதி தேவை Heavy Vehicle Licence உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 831 3779

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1953



மறைவு 27 . 03 . 2025

**கந்தையா சந்திரராசா** சந்திரன் சாமி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரராசா நேற்று (27.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தண்டிகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராசையா, காலஞ்சென்ற முருகையா, மற்றும் தவபதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2025) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
021 223 2531, 077 262 7581

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 13 . 05 . 1933



மறைவு 21 . 03 . 2023

**அமரர் இராசபூபதி நாகேந்திரம்**

*திதி: சதுர்த்தசி (28.03.2025)*

அம்மா நீங்கள் எமை விட்டு
பிரிந்து இரண்டு வருடங்கள்
ஆகி விட்டது ஆனால்
தினம் தினம் உங்களை
நினைத்து நினைத்து வருந்துகின்றோம் அம்மா
அம்மா ஐயிரண்டு மாதங்கள் கருவினிலே
எமை சுமந்து ஈன்றெடுத்து பசியாற்றி நோய்
நொடி இன்றி படிக்க வைத்து
எம்மை சொந்தக் காலில்
நிற்க வைத்த அன்புத் தாயே
நீ இன்றி சிறகொடிந்த பிள்ளை
போல் தவிக்கின்றோம் அம்மா.

சுன்னாகம். (CS/57851) J-1 குடும்பத்தினர்



கார்கள் வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

**072 564 6735**


# உல்லாசப்பயணிகளால் அதிகரிக்கும் விபத்துகள்

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவதால் விபத்துகள் ஏற்படுகின்றன என்றும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்துப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தைத் தம்வசம் வைத்திருக்கவேண்டும். இல்லாதபட்சத்தில் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு விடும் உரிமையாளர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று போக்குவரத்துப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-6)


**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் பிரபலமா உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- உணவு பரிமாறுபவர்
- தேனீர் தயாரிப்பவர்
- பழச்சாறு தயாரிப்பவர்

உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- **077 829 5658**



**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

**தொழிநுட்பப் பிரிவு**

**A / L 2027**

- ஆரம்பம் - 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் - காலை 8.30 am

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: **077 017 5346**
(எ.44674) (N-1)



# NEW SCIENCE HALL
## KANNATHIDDY ROAD, JAFFNA

**2027 A/L கணித உயிரியல் பிரிவுகள்**

நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS**<br>திரு. G. பிரபா, திரு. N. கபிலன், திரு. R. ராகுலன் | **PHYSICS**<br>Mr. M. KUGANESWARAN |
| **CHEMISTRY**<br>திரு. G. Beno, திரு. V.K. நந்தா | **CHEMISTRY**<br>Mr. G. BENO |
| **BIOLOGY**<br>திரு. R. குகானந்தன், திரு. K. இராகவன் | **BIOLOGY**<br>Mr.V.S. GUNASEELAN |
| **COM.MATHS**<br>திரு. P. செந்தில்நாதன். திரு. V.S. சிவகரன் | **COM.MATHS**<br>Mr. P.SENTHIL NATHAN<br>Mr. V.S. SIVAKARAN |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**ஆரம்பம்: 30.03.2025 (Sunday) 9-15 am**

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்பு: **076 566 3006, 076 569 3006, 077 791 7611**

https:facebook.com / new science hall




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.